**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 102/2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 8 |
| Name (திரு/திருமதி) | : தாகூர் |
| Father's Name/ Husband's Name | : அப்பாஜி |
| Village & Taluk | : ஆவடி |
| Calling | : மருத்துவர் (ஓய்வு) |
| Age | : 64 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.11.2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் செஞ்சி அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருததுவராக பணி செய்து கடந்த 2019ம் வருடம் ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2010ம் வருடம் செஞ்சி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது கடந்த 19.12.2010 அன்று அவலூர்பேட்டை கா.நி குற்ற எண் 355/2010 என்ற வழக்கில் தொடர்புடைய திரு. பிரபாகரன் வ–14 வயது மதிக்க தக்க ஆண் பிரேதத்தினை சிறப்பு உதவி ஆய்வளர் திரு. விஷ்வநாதன் என்பவர் வேண்டுகோள் கடிதத்தின் மூலம் பிரேத பரிசோதனை செய்ய வேண்டி ஒப்படைத்தார். பிரேத பரிசோதணையை காலை 11.15 மணியளவில் தொடங்கினேன். பிரேதத்தின் மீதும் பிரேதத்தின் உள்ளும் காணைப்பட்ட விவரங்களை விரிவாக எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். பிரேத பரிசோதணையின் முடிவில் இறந்த நபர் பிரேத பரிசோதனை செய்வதற்கு சுமார் 15 – 18 மணி நேரத்திற்குள்ளாக இறந்து இருக்க கூடும் எனவும் இறந்த நபர் அவரது தலையில் ஏற்பட்ட காயத்தின் காரணமாகவும் அதிர்ச்சி மற்றும் ரத்த போக்கின் காரணமாக இறந்து இருக்க கூடும் என கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். **மேற்படி பிரேத பரிசோதணை அறிக்கை அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. காவலர்கள் என்னை விசாரித்தனர் ஆனால் என் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. என்னை விசாரணை செய்த காவலரின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான்

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.